




https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

01ST JUNE 2025 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 106




# மேலும் 6 முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக வழக்கு



லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் 6 பேருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாக

02 ➤

## கொழும்பு மாநகர சபை: நாளை ஆட்சி அமைப்பது நாமே

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி எம்பி அஜித் பி.பெரேரா கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் :

கொழும்பு மாநகர சபையைப் பொறுத்தவரை அரசுக்கும் 50 வீத பெரும்பான்மை இல்லை. எமக்கும் இல்லை.

ஆனால், எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்தால் ஆட்சி அமைக்க முடியும். அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்துள்ளோம்.

ஆகவே, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்த ஆட்சி எமது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் திங்கள் கிழமை அமைவது உறுதி.

## ரகசிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஊடாக இலங்கையை கைப்பற்றிவிட்டது இந்தியா

- முன்னாள் எம்பி மதுர விதானகே குற்றச்சாட்டு -



இந்தியாவும் இலங்கையும் செய்துள்ள ரகசிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஊடாக இந்தியா இலங்கையை கைப்பற்றியுள்ளது என்று ஜனநாயக கூட்டமைப்பின் முன்னாள் எம்பி மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் :

இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.அது ரகசிய ஒப்பந்தம். பாரதூரமான ஒப்பந்தம்.இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்த நாடே இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த பிராந்தியத்தின் கடற்பரப்பில் ஏனைய நாடுகளின் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்க முடியாது.

இது மிகவும் ஆபத்தான விடயம்.இலங்கை கடற்பரப்பு பொருளாதார முக்கியத்தும் வாய்ந்த இடம்.

ஒரு வருடத்துக்கு 40 ஆயிரம் கப்பல்கள் பயணிக்கின்றன.இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினால் இந்தக் கப்பல்கள் செல்ல முடியாது.

இது என்ன ஒரு முட்டாள்தனமான ஒப்பந்தம்.ஏனைய நாடுகளை நாம் பகைத்துக்கொண்டு அடி வாங்கப்போகிறோம்.

இந்தியா –சீனா முரண்பாட்டை அடிப்படையாக வைத்து பல நாடுகள் இரண்டு அணிகளாக பிரிந்துள்ளன.

இந்த அரசு கடும் பலவீனமான அரசாக இருக்கிறது.மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது என்பதற்காக அரசு பலமான –திறமையான அரசு என்று அர்த்தமல்ல என்பதற்கு இந்த ஒப்பந்தம் நல்ல ஆதாரம்.

இது தொடர்பில் அரசு வாய் திறப்பதாக இல்லை. ஒப்பந்தத்தை மக்களுக்கு வெளிப்படுத்தத் தயங்குகிறது.

இப்படி ஒப்பந்தம் ரணில் விக்ரமசிங்கவால் அல்லது மஹிந்தவால் செய்திருந்தால் ஜேவிபி என்ன பாடுபட்டிருக்கும் என்று எமக்குத் தெரியும்.

இப்போது அவர்களே இப்படியான ஒரு மோசமான ஒப்பந்தத்தை செய்துவிட்டு அமைதியாக இருக்கிறார்கள்.

இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எதிர்க்கட்சியும் இதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல வேண்டும்.நாங்கள் அதற்கு ஆதரவு வழங்குவோம்.– என்றார்.



## கல் உடைக்கும் தண்டனை இல்லை

கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர்கள் மஹிந்தானந்த அழுத்கமே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகிய இருவருக்கும் கல் உடைக்கும் தண்டனை வழங்கப்படமாட்டாது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க கூறினார்.

கடூழிய சிறைத் தண்டனை என்றால் அவர்கள் அதிகமாக ஈடுபடுத்தப்படுவது கல் உடைக்கும் வேலையில்தான். இப்பொது அந்தத் தண்டனை இல்லை என்று அவர் மேலும் சொன்னார்.

இந்த இருவருக்கும் எவ்வாறான தண்டனை சிறைக்குள் வழங்கப்படும் என்று அவரிடம் வினவியபோதே இவ்வாறு கூறினார்.

“முதலில் அவர்களின் ஆரோக்கிய நிலைமை பரிசோதித்துப் பார்க்கப்படும்.அதற்கு ஏற்பவே வேலை வழங்கப்படும். நோய் இருந்தால் சிகிச்சை வழங்கப்படும்.

தூசு ஒத்துக்கொள்ளாதவர்களை நாம் தூசு தட்டுவதற்கு – துப்பரவு செய்வதற்கு நிறுத்தமாட்டோம்.

இருதய நோய் உள்ளவர்களை இருதயத்தைப் பாதிக்கும் வகையிலான வேலையில் அமர்த்தமாட்டோம்.

கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டதும் நாம் எமது தொழில்சாலையில் அவர்களை அமர்த்துவோம். எங்களுக்குத் தனியாக தொழில்சாலை உண்டு.

ஆடை சலவை மற்றும் மர ஆலை போன்ற தொழிலில் ஈடுபடுத்துவோம்.– என்றார்.

புதுசுடர்
www.puthusudar.lk
2025 JUNE 01 - SUNDAY

# அவகாசம் வழங்குவோம்

இந்த ஆட்சி மலர்ந்ததும் கூடவே பல மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன.அரச செலவில் சிக்கனம், எளிமை, ஊழல், மோசடி இன்மை உள்ளிட்ட பல விடயங்கள் அவற்றுள் அடங்கும்.

சிலர் எதிர்பார்த்ததுபோல் விலைவாசி குறையவில்லை. அதை சிலர் குறையாகப் பார்த்தாலும் சிலர் அதை பெரிதுபடுத்தவில்லை.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்று வேண்டும். ஊழல்,மோசடியற்ற ஆட்சி வேண்டும் 'எல்லா கட்டமைப்பிலும் மாற்றம் வேண்டும்' கடந்த ஆட்சியில் திருடியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அந்த அடிப்படையில் இப்போது திருடர்கள் கைது செய்யப்படுவதும் தண்டிக்கப்படுவதும் ஆரம்பமாகிவிட்டது.

முதலில் முன்னாள் அமைச்சர்கள் மஹிந்தானந்த அழுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர் சிறை அனுப்பப்பட்டுள்ளனர்.

அடுத்து இன்னும் பலர் வரிசையில் இருக்கின்றனர். ஆகவே,மக்கள் திருடர்களை தண்டிக்கும் விடயத்தில் கவலைகொள்ளத் தேவையில்லை. அது ஒவ்வொன்றாக நடக்கும்.

அடுத்து விலைவாசி.அதை எடுத்த எடுப்பில் குறைக்க முடியாத கட்டத்தில் அரசு உள்ளது.அதற்கு காரணம் போதுமான நிதி கையில் இல்லை.

நிதியை ஓரளவு திரட்டிவிட்டுத்தான் அந்த விடயத்தில் கை வைக்கும்.

குறிப்பாக,சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி திட்டத்திற்குள் இந்த நாடு சிக்கி இருப்பதால் அதில் இருந்து விடுபடும் வரை விலை குறைப்பை எதிர்பார்க்க முடியாது.

அந்த நிகழ்ச்சி திட்டம் முடிவுக்கு வந்ததும் விலை குறைப்பை எதிர்பார்க்கலாம். அதேவேளை,அரசு உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதிலும் ஏற்றுமதி மற்றும் சுற்றுலா துறையை முன்னேற்றுவதிலும் கவனம் செலுத்தி வருகிறது.

இந்த முயற்சி ஒரு முன்னேற்றகரமான கட்டத்தை அடையும்போது இந்த மக்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள் ஒவ்வொன்றாக நடக்கும்.

அதுவரைக்கும் மக்கள் பொறுமையாக இருப்பதுதான் சிறந்தது.அரசுக்கு அவகாசம் கொடுப்போம்.

## மேலும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

லஞ்ச,ஊழல் ஆணைக்குழு வட்டாரம் தெரிவிக்கிறது.

அவர்களுள் முன்னாள் அமைச்சர்கள் நால்வரும் இராஜாங்க அமைச்சர்கள் இருவரும் அடங்குகின்றனர் என்று அறிய முடிகிறது.

இவர்கள் மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு மற்றும் குருநாகல் போன்ற இடங்களை சேர்ந்தவர்கள் என்று அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

இவர்களுக்கு எதிரான லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை நிறைவடைந்துள்ளதாகவும் சில நாட்களுக்குள் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இவர்கள் ஆறு பேரும் தங்களின் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து அரசுக்கு நட்டம் ஏற்படுத்தி லஞ்சம் பெற்று பணம் சம்பாதித்தனர் என்று அவர் மேலும் கூறினார்.

## நிறைவேற்று அதிகாரமிக்க இறுதி ஜனாதிபதியாக அனுரகுமார திஸாநாயக்க இருக்க வேண்டும்

### - ஆசுமாரசிங்க கோரிக்கை -

நிறைவேற்று அதிகாரமிக்க இறுதி ஜனாதிபதியாக அனுரகுமார திஸாநாயக்க இருக்க வேண்டும். அவரிடம் இருக்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வைத்து இந்த அதிகாரத்தை நீக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் எம்பி கலாநிதி ஆசு மாரசிங்க கூறினார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துக் கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில் :

இறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக இருக்கும் வாய்ப்பு தற்போதைய ஜனாதிபதிக்கே உண்டு.

அவர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உண்டு .ஐந்து வருடங்கள் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக இருந்துவிட்டு அதை நீக்கி விடலாம். அதை அவர் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை நீக்கப்போவதாகக் கூறியே சந்திரிக்கா இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக வந்தார்.

மஹிந்தவும் அப்படி கூறியே இரண்டு தடவைகள் வந்தார்.இறுதியில் அவர்கள் அதை பாதுகாத்தார்களே தவிர நீக்கவில்லை.

இந்த அதிகாரத்தை நீக்க வேண்டும் என்று சொன்ன கட்சிக்கு இதுவரை மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கவில்லை.இப்போது ஜேவிபிக்கு கிடைத்துள்ளது.

அவர்களும் இதை நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளவர்கள். அவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பாவித்து நிறைவேற்று அதிகாரத்தை நீக்க வேண்டும் – என்றார்.

## எம்பிக்களை வெளியேற்றிய சபாநாயகர்

எதிர்க்கட்சி எம்பிக்களின் பாதுகாப்பு பிரச்சினை தொடர்பில் பேசுவதற்காக கடந்த வாரம் சபாநாயகருக்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் நாடாளுமன்றில் இடம்பெற்ற சந்திப்பின்போது எதிர்க்கட்சி எம்பிக்களை சபாநாயகர் வெளியேற்றிய சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது சபாநாயகருக்கு எதிர்கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில். ஆனால்,அந்தக் கூட்டத்துக்கு எம்பிக்களும் வந்திருந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த சபாநாயகர், இச்சந்திப்பு எனக்கும் எதிர்கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏனையவர்கள் வெளியேறுங்கள் என்று என்று உத்தரவிட்டதும் எம்பிக்கள் வேறு வழியின்றி வெளியேறினர்.

இதன் பின் எதிர்கட்சிகளின் தலைவர்கள் எம்பிக்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பில் சபாநாயகருக்கு விளக்கிக் கூறியதோடு எம்பிக்கள் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.




# ஆட்சியைப் பிடிக்குமா எதிர்க் கட்சிகள்?

– எம்.ஐ.முபாறக் –

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு வெற்றியீட்டியுள்ளபோதிலும் அது அரசுக்கு வீழ்ச்சிதான்.

நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் 23 லட்சம் வாக்குகள் குறைந்துள்ளன.

எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்தால் ஆட்சி அமைக்கும் வகையில் 160 இற்கு மேற்பட்ட சபைகள் உள்ளன.

அந்த சபைகளை கைப்பற்றும் முயற்சியில் சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இறங்கியுள்ளது.

மறுபுறம்,இந்தத் தேர்தலில் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியும் இதே முயற்சியில் இறங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் சில நாட்களாக ரணில் அரசியல் அரங்கில் என்னவெல்லாம் செய்தார் என்பது பற்றித்தான் இந்தப் பகுதியில் பார்க்கப் போகிறோம்.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ரணில் நாடு திரும்பிய உடனேயே மஹிந்தவைச் சந்தித்தார்.

கொழும்பு, விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

சுகவீனமுற்றிருந்த மஹிந்தவை சுகம் விசாரிப்பதாக இந்தச் சந்திப்பு அமைந்திருந்தாலும் உள் நோக்கம் அதுவல்ல.

சில சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதே இதன் நோக்கம்.

## மெல்ல கதையைத் தூக்கினார் ரணில்

"எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டிய காலம் வந்துள்ளது "" என கதையை ஆரம்பித்து வைத்தார். .

"ஓம்..ஓம்... நிறய இடங்கள்ள மக்கள் அரசுக்கு அதிகாரம் கொடுத்துள்ளாங்க. அவங்க செஞ்சிட்டு போகட்டும்" என்று பதில் வழங்கினார் மஹிந்த .

"இருந்தாலும் .நூற்றுக்கு மேற்பட்ட இடங்கள்ள அவங்களால ஆட்சி செய்ய ஏலா.எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்தா ஆட்சி அமைக்கலாம்" என்று பிடி கொடுக்காமல் கூறினார் ரணில்.

"ஓம்.. அப்படியான இடங்கள் இருந்தா எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஆட்சி செய்றதுல பிரச்சின இல்லத்தான். அப்படின்னா ..எதிர்க்கட்சிகளோட பேசுங்க...நாமலோடயும் பேசுங்க." என்றார் மஹிந்த.

## சஜித் வரவில்லை

மஹிந்தவை சந்தித்த சூட்டோடு – அவர் கொடுத்த க்ரீன் சிக்னலோடு உடனே களத்தில் இறங்கினார் ரணில்.

கடந்த புதன் கிழமை எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அனைவரையும் தனது அலுவலகத்துக்கு அழைத்து இது தொடர்பில் பேச்சு நடத்தினார்.

எல்லா எதிர்க்கட்சிகளிலும் இருந்து அவற்றின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

சஜித் மாத்திரம் கலந்துகொள்ளவில்லை.இதனால் அங்கு சிறு சலசலப்பு.

அவர் இதற்கு விரும்பவில்லையோ .அப்படியென்றால் ஆட்சி அமைப்பது சிக்கலாகுமே என்று பேசிக்கொண்டனர் அங்கு வந்தவர்கள் .

அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார் அனுரபிரியதர்சன யாப்பா.

"நான் சஜித்தோட பேசிட்டேன்.அவர் ஆதரவுதான்" என்றார்.

அதன் பிறகுதான் எதிர்க்கட்சிகளுக்கு ஒரு நம்பிக்கை.

## ரணிலின் நரித்தனம்

இச்சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்களுள் தெரென தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவரும் சர்வஜன பலய கட்சியின் தலைவருமான திலீத் ஜயவீரவும் ஒருவர்.

ஆனால்,அவரும் வரவில்லை. இதனால் குழம்பிப் போன சிலர் ரணிலிடம் கேள்வி எழுப்பினர்.

"அது பிரச்சின இல்லை. இந்தா அவருக்கு கோல் எடுக்கேன் "" என்று கூறி



ரணில் திலித்துக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

திலீத் கம்பஹா பகுதியில் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்தார். அதனால்தான் வர முடியவில்லை.அங்கு அதிக சத்தம் காரணமாக திலித்தால் ரணிலின் தொலைபேசி அழைப்புக்கு சரியாக பதில் வழங்க முடியவில்லை.

ஆனால், ரணிலோ வந்திருப்பவர்களை நம்ப வைப்பதற்காக திலித்தும் இதற்கு ஆதரவு என்று சொல்லிவிட்டார் என்று கூறினார்.

இதன் பின் ஊடகங்களில் செய்தி வெளியானபோது உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ரணில் தலைமையிலான கூட்டணியில் திலீத்தின் சர்வஜன பலய கட்சியும் உள்ளது. என்று கூறப்பட்டது.

## திலித் டென்ஷன்

இந்தச் செய்தியைப் பார்த்ததும் ஆடிப்போனார் திலித்.

"நான் எப்பபா ஆதரவு என்று சொன்னேன்"

உடனடியாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவரது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

"உள்ளூராட்சி சபைகளில் எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைப்பதற்குத் தேவைப்படும் ஆதரவை அந்தந்த சபைகளில் வெவ்வேறு எதிர்க்கட்சிகளுக்கு வழங்குவதற்கு எமது கட்சி தயார்.

ஆனால், இதற்கான ரணிலின் கூட்டமைப்பில் நாம் இணையமாட்டோம்"

என்று ஒரே அடியில் அடித்துவிட்டார் திலித்.

## சஜித் குறி வைக்கும் 160:

காலை வாரும் ரணில்

ரணில் எதிர்கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணி ஒன்றை அமைத்து ஆட்சி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றபோதிலும் மறுபுறம்,சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்துவிடாதவாறு காய் நகர்த்தி வருகிறார்.

160 இற்கு மேற்பட்ட சபைகள் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கும் நிலையில் இருப்பதால் அந்த சபைகள் அனைத்தையும் ஏனைய எதிர்க்கட்சிகளின் உதவியுடன் தனது கட்சி கைப்பற்ற வேண்டும் என்பதுதான் சஜித்தின் திட்டம்.

அதற்கான காய் நகர்த்தலை அவர் மேற்கொண்டு வருகிறார்.

ஆனால், ரணிலோ அப்படி நடக்க விடாமல் சஜித்தின் காலை வாரிவிடும் வேலையில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்.

## சஜித்துக்கு மற்றுமோர் ஆப்பு

கொழும்பு மாநகர சபையை திசை காட்டி கைப்பற்றியுள்ளபோதிலும் சஜித் தலைமையில் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஆட்சியைப் பிடிக்கும் நடவடிக்கை ஒன்றை சஜித் தொடங்கியுள்ளார்.

ஆனால், இந்த இடத்திலும் ரணில் கை போடத் தொடங்கியுள்ளார்.

சஜித் தரப்பு கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்ற முடியாதவாறு சதி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவாகி இருக்கும் ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களை தனித்தனியாக சந்தித்து கொழும்பு மாநகர சபையின் ஆட்சியைப் பிடித்துள்ள திசைகாட்டியே அதை ஆட்சி செய்ய வேண்டும்.அதற்கு நாம் இடம் கொடுக்க வேண்டும் என்று கூறி வருகிறார்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியைப் பிடிக்க வேண்டும்.அதில் நாம் பங்காளிகளாகி சுகபோகம் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிற ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ரணிலின் இந்த போதனையை விரும்பவில்லை.

ரணிலின் அரசியல் எதிரி சஜித் மட்டும்தான்.அவரை அருகில் எடுத்து இல்லாமல் ஆக்க வேண்டும் என்பதுதான் ரணிலின் திட்டம்.

இதற்காக ரணில் பல தேர்தல்களில் கூட்டணி என்ற பெயரில் சஜித்தை தன்னோடு இணைப்பதற்கு முயற்சி செய்தபோதிலும் சஜித் சிக்கவே இல்லை.

சஜித்துக்குத் தெரியும்தானே ரணில் யாரென்று.



# முன்னாள் அமைச்சர்கள் 40 பேர் விரைவில் கைது

## பெயர் பட்டியல் தயார் என்கிறார் விமல் வீரவன்ச

பல்வேறு குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் அமைச்சர்கள் 40 பேரைக் கைது செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று விமல் வீரவன்ச எம்பி தெரிவித்துள்ளது.

அவர்களின் பெயர் பட்டியல் ஜனாதிபதி செயலகத்தில் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் :

திருடர்களை பிடிக்காததால்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு வாக்குகள் குறைந்தன என்று அரசு நம்புகிறது.

அதனால் பலரைக் கைது செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவர்களின் பெயர் பட்டியல் ஜனாதிபதி செயலகத்தில் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் எனது பெயரும் உண்டு.மேலும், காஞ்சன விஜயசேகர,ரமேஷ் பதிரன உள்ளிட்டவர்களின் பெயர்களும் உண்டு.

மஹிந்தானந்த அழுத்கமவின் பெயரும் அதில் உண்டு.அவர் கைது செய்யப்பட்டுவிட்டார்.

ஒரு அதிகாரி ஒவ்வொரு நாளும் ஜனாதிபதி செயலகத்துக்கு சென்று.இன்று யாரை கைது செய்வது,நாளை யாரை கைது செய்வது என்று ஆலோசனை பெறுகிறார்.

விரைவில் அந்த அதிகாரியின் பெயர் விபரங்களை வாகன இலக்கத்தோடு தெரிவிப்போம்.



இந்த 40 பேரினது பெயர் பட்டியலைத் தயார் செய்தவர்கள் யாரென்றும் எனக்குத் தெரியும்.விரைவில் அதையும் சொல்வேன்.

அரசு தனது இயலாமையை மூடி மறைப்பதற்காக - தனது தேர்தல் தோல்வியையே ஈடு செய்வதற்காக இவ்வாறான வேலையில் இறங்கியுள்ளது.

என்றார்.

### இலங்கையின் ஆட்சியை முதல் தடவையாக

# பயங்கரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்

## முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில

இலங்கையில் இப்போது முதல் தடவையாக பயங்கரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்கள்.

முன்னாள் பயங்கரவாதி நாட்டின் தலைவராகியுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துக்கூறும்போதே இவ்வாறு சொன்னார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் :

அதனால்தான் அவருக்கு படையினர் மீது வெறுப்பும் புலிகள்மீது அன்பும் வருகிறது.புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி எம்முடன் இணைந்து புலிகளுக்கு எதிராகப் போராடிய பிள்ளையான் இப்போது சிறையில்.

புலிகள் பக்கத்தில் இருந்த எவரும் கைது செய்யப்படவில்லை.

சிறையில் இருக்கும் புலிகளை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள புலிகளுக்கு அழைப்பு விடுக்கிறார்.இங்கே வந்து முதலீடு செய்யுமாறு அழைப்பு



விடுக்கிறார். பழையவற்றை மறந்து ஒன்றாக செயற்படுவோம் என்கிறார்.

ஜனாதிபதிக்கு நெருக்கமாகத் தெரிபவர்கள் புலிகளே அன்றி புலிகளுக்கு எதிராக சண்டையிட்டு நாட்டை மீட்ட படையினர் அல்ல. இராணுவத்தை இராணுவ வீரர்கள் என்று அழைக்க மறுக்கிறார்.வெறுமனே சிப்பாய்கள் என்று கூறுகிறார்.

ஜேவிபியின் பயங்கரவாத செயற்பாட்டை பணியினர் அடக்கியதன் விளைவே இது.

என்றார்.

### மோசடிகள் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாடுகளில் உள்ள சொத்துக்கள் :

# இலங்கைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் வசந்த சமரசிங்க

மோசடிகள்மூலம் வெளிநாடுகளில் சேர்த்து வைத்திருக்கும் இலங்கையர்களின் சொத்துக்களை - பணத்தை இலங்கைக்குக் கொண்டு வருவது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க கூறினார்.அவர் மேலும் கூறுகையில் :

எமது ஆட்சியில் எவரும் திருட முடியாது.அவ்வாறு செய்தால் அவர்களுக்கு சிறைதான்.

கடந்த அரசில் திருடிய அரசியல்வாதிகள் இப்போது சிறையில். அதிகமான விசாரணைகள் முடிவடைந்து கொண்டு செல்கின்றன.

ஆகவே,அதிகமான விடயங்கள் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ளன.

மோசடிகள்மூலம் வெளிநாடுகளில் சேர்த்து வைத்திருக்கும் இலங்கையர்களின் சொத்துக்களை - பணத்தை இலங்கைக்கு கொண்டு வருவது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.



அதுமட்டுமல்ல. உரிமையாளர்கள் இல்லாமல் இருக்கும் சொத்துக்கள் அரசுடமை யாக்கப்படும்.

அந்தச் சொத்துக்கள் தொடர்பில் மக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அவற்றின் உரிமையாளர்கள் அந்தச் சொத்துக்கள் அவர்களுடையது தான் என்று உறுதிப்படுத்துவ தோடு அவை ஈட்டப்பட்ட முறை - அதற்காக பணம் பெறப்பட்ட முறை போன்றவற்றையும் நிரூபிக்க வேண்டும்.

அவ்வாறு நிரூபிக்கத் தவறினால் அந்தச் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்.

உதாரணத்துக்கு, பெரிய பங்களாவில் சைக்கிள்கூட வாங்க வழியில்லாதவர் உரிமையாளர் என்ற போர்வையில் வாழ்கிறார்.

மக்களுக்கு சந்தேகம் வந்து முறைப்பாடு செய்தால் சம்பந்தப்பட்டவர் தோன்றி அந்த பங்களாவின் உரித்தை நிஷரூபிக்க வேண்டும்.

நிரூபிக்கத் தவறினால் அந்த பங்களா அரசுடமையாக்கப் படும்.

இவ்வாறு சிலர் பிழையான வழியில் ஈட்டிய சொத்துக்களுக்கு பினாமிகளை நியமித்துவிட்டு மறைந்து வாழ்கின்றனர்.இனிமேல் அப்படி முடியாது.

அப்படியான சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கான சட்டம் கடந்த மாதம் இயற்றப்பட்டுவிட்டது.

என்றார்.

# புலிகள் தோல்வியடையவில்லை ! நாமல் தெரிவிப்பு



புலிகள் ஆயுதரீதியாகத் தோல்விய டைந்தபோதிலும் கருத்தியல் ரீதியாக தோல்வியடையவில்லை.

அதன் விளைவுதான் கனடாவில் இனப்படுகொலை நினைவுத்தூபி எழுப்பப்பட்டமை என்று நாமல் ராஜபக்ஷ எம்பி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துக்கூறும்போதே இவ்வாறு சொன்னார்.அவர் கூறுகையில் :

இந்த நாட்டில் இராணுவத்துடனும் பொலிஸூடனும் அதிகம் மோதியவர்கள் ஜேவிபியும் புலிகளுமாகும்.

கிராமங்களில் தாய்,தந்தையர்கள், பிள்ளைகள் அதிகமாகக் கொல்லப்பட்டது புலிகளாலும் ஜேவிபியாலுமே.

புலிகள் அழிந்துவிட்டார்கள்.

ஜேவிபி அரசியலுக்குத் திரும்பியது.

இன்று ஆட்சியையும் பிடித்துவிட்டது.

பிள்ளையானும் கருணாவும் அரசியலுக்கு வர முடியும் என்றால் ஜேவிபியும் வர முடியும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கிறோம்.

நாம் சண்டை செய்தது புலிகளுடன். அது எப்படி இனவாதமாக அமையும். நாம் தமிழ் மக்களுடன் சண்டை செய்யவில்லையே.

புலனாய்வு பிரிவில் அதிகமான முஸ்லிம்கள் உள்ளார்கள்.போர் முடிந்த பின் அதிகமான தமிழ் இளைஞர்கள் இராணுவத்திலும் பொலிஸிலும் இணைந்தார்கள்.

ஆனால்,தற்போதைய அரசு தமிழ் மக்களும் புலிகளும் சமம் என்று காட்டி வருகிறது.

இதுதான் இனவாதம்.

இந்த இனவாதம் எம்மிடமில்லை.

புலிகள் ஆயுதரீதியாகத் தோல்வியடைந்தபோதிலும் கருத்தியல்ரீதியாக தோல்வியடையவில்லை.

அதன் விளைவுதான் கனடாவில் இனப்படுகொலை நினைவுத்தூபி எழுப்பப்பட்டமை.

# எதிர்க்கட்சி எம்பிக்களின் உரிமைகள் மீறல் : சர்வதேச நாடாளுமன்றத்திடம் முறைப்பாடு

## தயாசிறி எம்பி தெரிவிப்பு

நாடாளுமந்றதுக்குள் எதிர்க்கட்சி எம்பிக்களின் உரிமைகள் அரசால் நசுக்கப்படுகின்றன என்றும் அது தொடர்பில் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் தயாசிறி ஜயசேகர எம்பி கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் :

நாடாளுமன்றில் எதிர்க்கட்சி எம்பிக்களின் உரிமைகள் மீறப் படுகின்றன.அரசிடம் கேள்வி கேட்க முடியாது.சபை முதல்வர் அதற்கு இடம் கொடுப்பதில்லை.

சபாநாயகரின் வேலையை சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க செய்கி-றார்.

சபாநாயகர் பிமல் ரத்நாயக்கவுக்கு அஞ்சுகிறார். அடுத்த எம்பிக்கள் பேசுவதை - எழுந்து கேள்வி கேட்பதைத் தடுக்கும் அதிகாரம் சபை முதல்வருக்கு இல்லை.

நாம் அரசிடம் கேள்வி கேட்டால் அதற்கு அரசு பதில் வழங்க வேண்டும்.அதுதானே நாடாளுமன்றம்.

அதற்காகத்தான் நாம் நாடாளுமன்றம் சென்றுள்ளோம்.

மக்கள் எம்மிடம் அதிகமான பிரச்சினைகளை கூறி அவற்றை நாடாளுமன்றில் பேசமாறு கூறுகிறார்கள்.அரசிடம் இருந்து பதிலை பெற்றுத் தருமாறு கூறுகிறார்கள்.

இதைத்தான் நாம் செய்கிறோம் .பிரபல்யமாக வேண்டும் என்பதற்காக செய்யவில்லை.

இனி பிரபல்யமாவதற்கு என்ன இருக்கு.மக்களுக்கு எங்களைத் தெரியும்தானே.

நான் அரசிடம் அதிகமான கேள்விகளை முன்வைத்தால் அரச தரப்பு என்னை அடக்க முற்படுகிறது.நான் நாடாளுமன்றில் அநாகரீகமாக நடந்துகொள்வதாக குற்றஞ்சாட்டுகிறது.

உண்மையில்,நான் அரசிடம் கட்டாயம் கேட்க வேண்டிய கேள்வியைத்தான் கேட்கிறேன்.



சபாநாயகர் இதை விளங்கிக்கொள்ள வேண்டும்.அவரது பணியை சரியாகச் செய்ய வேண்டும்.அவரது கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும்.

நான் 1994 இல் இருந்து பல சபாநாயகர்களை பார்த்துள்ளேன்.

அவர்கள் மிகவும் திறமையாக செயற்பட்டுள்ளார்கள். அவர்களின் பணியை சரியாக செய்துள்ளார்கள்.

நான் எழுந்து பேசுவதற்கு சபாநாயகர் அனுமதி தந்தால் அரச தரப்பு எம்பி எழுந்து அப்படி அனுமதி கொடுத்தது பிழை என்கிறார்.

அத்தோடுதான் பிரச்சினையே தொடங்குகிறது,சபாநாயகர் அனுமதி கொடுத்தால் அந்த அனுமதி பிழை என்று அடுத்த எம்பியால் கூற முடியாது.

இவ்வாறானவர்களை கட்டுப்படுத்து வதற்கு சபாநாயகர் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

எமது உரிமைகள் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்துக்குள் மீறப்படுவது தொடர்பில் - நாம் அடக்கப்படுவது தொடர்பில் நாம் சர்வதேச நாடாளு மன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளோம். - என்றார்.

# DIMO விற்கு விருது




இலங்கையில் Mercedes-Benz வாகனங்களுக்கான ஒரேயொரு அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தராக திகழும் DIMO நிறுவனம், தென்கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய விநியோகஸ்தர்களை தாண்டி இந்த விருதை வென்றுள்ளது. 85 ஆண்டுகளுக்கும் மேலாக வாகனம் தொடர்பான விசேடத்துவத்தின் மீதான அதிகாரத்துடன் அடையப்பட்ட இந்த சாதனையானது, Mercedes-Benz AG நிறுவனம் வகுத்துள்ள சர்வதேச தரநிலைகளை தொடர்ந்து பின்பற்றி வருவதில் DIMO கொண்டுள்ள அர்ப்பணிப்பே இந்த வெற்றியின் பின்னணி ஆகும். இந்த விருது, DIMO நிறுவனம் விற்பனைக்குப் பின்னர் வழங்கும் சேவையின் விசேடத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. இந்நிகழ்வில், DIMO நிறுவனத்தின் Mercedes-Benz இன் விற்பனைக்குப் பிந்தைய சேவையின் பிரதிநிதியான அபிலாஷ் ஸ்ரீயங்கரன், 'Top Service Adviser - Sri Lanka' எனும் விருதைப் பெற்றார். Mercedes-Benz AG நிறுவனத்தின் துல்லிய சேவை கண்காணிப்புகள் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி கருத்துக்கணிப்புகள் மூலம் DIMO வழங்கும் சேவையின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

# இலங்கையின் வாகன சந்தையில் BYD-யின் வளர்ச்சி



உலகின் முன்னணி மாற்று சக்தி வாகன (New Energy Vehicle) வர்த்தகநாம மான BYD, இலங்கையில் அறிமுகமான சில மாதங்களிலேயே நாட்டின் வாகனச் சந்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்ற த்தை அடைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதில் இருந்து, BYD இலங்கை வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுவருகிறது. நிறுவனத்தின் மின்சார வாகனங்கள் (EV) மற்றும் plug-in hybrid மோட்டார் வாகனங்களுக்கான (PHEV) தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. புதிதாக சந்தைக்கு வந்திருந்தாலும், மின்சார வாகனங்கள் மற்றும் plug-in hybrid மோட்டார் வாகனங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் பிரபலமான தேர்வாக BYD வாகனங்கள் மாறியுள்ளது. கச்சிதமான மற்றும் குறைந்த விலையில் அதிநவீன BYD DOLPHIN, சக்திவாய்ந்த மற்றும் நேர்த்தியான BYD SEAL, அத்தோடு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட சாகச அனுபவதுத்துக்காக வடிவமைக்கப்பட்ட, வலுவான மற்றும் சரளை சாலை பகுதிகளுக்கு ஏற்ற plug-in hybrid pickup ஆகிய SHARK 06 மாதிரிகளோடுகூட BYD நிறுவனம் இலங்கை வாடிக்கையாளரிடையே பிரபலமடைந்து வருகிறது.

# கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் அறிக்கை (JAAF)

ஏப்ரல் 2025ல் இலங்கையின் ஆடை ஏற்றுமதி வலுவான செயல்திறனை பதிவு செய்துள்ளது, மொத்த ஏற்றுமதிகள் கடந்த ஆண்டு அதே மாதத்துடன் ஒப்பிடும்போது 15.14% அதிகரித்துள்ளன. இந்த வளர்ச்சிக்கு அமெரிக்கா (6.83% அதிகரிப்பு), ஐரோப்பிய ஒன்றியம் (UK – ஐக்கிய இராஜ்சியம் தவிர) (27.04% அதிகரிப்பு), மற்றும் ஐக்கிய இராஜ்சியம் (7.45% அதிகரிப்பு) உள்ளிட்ட முக்கிய சந்தைகளில் இருந்து வந்த உறுதியான தேவை காரணமாகும். பிற சந்தைகளுக்கான ஏற்றுமதிகளும் 21.18% அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனவரி முதல் ஏப்ரல் 2025 வரை, மொத்த ஆடை ஏற்றுமதி 1.66 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தை விட 12.4% அதிகரிப்பைக் காட்டுகிறது. குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதி 18.13%, அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 10.06%, மற்றும் பிற சந்தைகளுக்கான ஏற்றுமதி 13.56% அதிகரித்துள்ளன. அதே நேரத்தில், இங்கிலாந்து சந்தை 6.26% வளர்ச்சி அடைந்துள்ளது.

SRI LANKA APPAREL SEAMLESS SOLUTIONS

இந்த முடிவுகள் தற்போதைய உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் ஆடைத் துறையின் தாங்கும் திறனையும், தொடர்ச்சியான போட்டித்தன்மையையும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

மேலதிகத் தகவல்களுக்கும், கடந்த ஐந்து ஆண்டுகளின் தரவு ஒப்பீடுகளுக்கும் இணைக்கப்பட்டுள்ள விரிவான அட்டவணைகளைப் பார்க்கவும். இந்த முடிவுகள், உலகளாவிய சவால்கள் நீடிக்கும் இந்தக் காலகட்டத்திலும் இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் உறுதிப்பாடு மற்றும் போட்டித்தன்மையை ஏற்படுத்துள்ளது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. இதுதொடர்பான தரவுகள் தம்மிடம் உள்ளதாக கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடப்பத்தக்கது.

# அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் "SheResumes"




தமது தொழிலில் சற்று இடைவெளியை எடுத்த பின்னர் மீண்டும் பணிக்குழாமிற்கு திரும்புவதற்கு தயாராகவுள்ள பெண்களுக்கு ஆதரவளிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட ஒரு முயற்சியான "SheResumes" என்பதை அலியான்ஸ் லங்கா பெருமையுடன் அறிமுகப்படுத்தி யுள்ளது.

பெண்கள் தமது தொழில் வாழ்வின் மீண்டும் வெற்றிகரமாகக் காலடியெடுத்து வைப்பதற்குத் தேவையான கருவிகள், திறன்கள் மற்றும் தன்னம்பிக்கையை வழங்குவதில் இந்நிகழ்ச்சித்திட்டம் கவனம் செலுத்தியுள்ளது.

தமது தொழிலிலிருந்து சற்று இடைவெளியை எடுத்துக் கொண்ட பின்னர் பெண்கள் முகங்கொடுக்கின்ற சவால்களை இனங்கண்டு கொண்ட அலியான்ஸ் லங்கா, கட்டமைக்கப்பட்ட மீள்-திறன் மேம்பாடு, தொழில் வழிகாட்டல், மற்றும் தொழில் தேடுவதற்கான ஆதரவு ஆகியவற்றை வழங்குகின்றது. பணிகளுக்குத் தேவையான அத்தியாவசிய திறன்களை இதில் பங்குபற்றுபவர்கள் பெற்றுக் கொள்வதுடன், தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வழிகாட்டல் பயிற்சிகளை வழங்கும் நிறுவன கூட்டாளர்களைக் கொண்ட வலையமைப்புடன் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளவும் வழிகிடைக்கின்றது. "SheResumes" என்பது வெறுமனே ஒரு தொழில் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் அப்பாற்பட்டது என்பதுடன், பெண்களுக்கு வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதை நோக்கிய ஒரு படியாகவும், பணிக்குழாமில் பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதாகவும் காணப்படுகின்றது.

# மாஸ்க்சிஸ் விருதுகள் இரவு



"Maxxis Committed to Conquer" எனும் கருப்பொருளில் Maxxis வருடாந்த விருது விழா, Shangri-La ஹோட்டலில் உள்ள மண்டபத்தில் வெகு விமரிசையாக அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதான விருந்தினராக Maxxis Taiwan International நிறுவனத்தின் உபதலைவர் Lenny H. K. Lee பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக Maxxis International Taiwan நிறுவனத்தின் சர்வதேச விற்பனை முகாமையாளர் Jack Lee, பிரிவு முகாமையாளர் Kenny, விற்பனை பிரதிநிதி நுனைல ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நாடளாவிய ரீதியில் 200 Maxxis முகவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் 60 ஆயஒஏளை முகவர்கள் அவர்கள் ஆற்றிய பங்களிப்பிற்காக மதிப்பீடு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2024 ஆம் ஆண்டின் சிறந்த முகவர் விருது U & H Wheels (Pvt) Ltd., Colombo 02 நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. அந்நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் வசந்த பெரேரா இவ்விருதை, Maxxis Taiwan International உபதலைவர் Lenny H. K. Lee மற்றும் Tyre House Group தலைவர் லெஸ்லி பொன்சேகா, முகாமைத்துவ பணிப்பாளர் சுனில் பொன்சேகா ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இரண்டாம் இடத்திற்கான விருது Wijaya Motors & Tyre House (Pvt) Ltd., Colombo 14 நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சஜித் சங்கலன பெற்றுக் கொண்டார். மூன்றாம் இடத்திற்கான விருது Ravindra Lanka Auto Service (Pvt) Ltd., Dehiwala நிறுவனத்தின் பணிப்பாளர் H.A.K. லக்ஷ்மனுக்கு வழங்கப்பட்டது.

# பிராந்திய அபிவிருத்தியை முன்னெடுக்கும் Belluna



ஜப்பானின் Belluna Co. Ltd. நிறுவனம் இலங்கையில் தனது முதலீட்டின் 10 ஆண்டுகால பூர்த்தியைக் கொண்டாடும் இவ்வேளையில், அந்நிறுவனத்திற்கு முழுவதும் சொந்தமான Belluna Lanka (Pvt) Ltd, இலங்கையை மையப்படுத்தி தெற்காசிய பிராந்தியத்திற்கான தனது நீண்டகால அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

அடுத்தக்கட்ட அத்தியாயமாக இலங்கையின் மேல் மற்றும் ஊவா மாகாணங்களில் Belluna Lanka மேலும் விரிவடைதோடு, தெற்காசியாவின் தொலைநோக்கு திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளுக்கு அமெரிக்க டொலர் 60 மில்லியனிற்கும் அதிகமான முதலீட்டில் ரியல் எஸ்டேட் மற்றும் சுற்றுலாத்துறையில் கால்பதிக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் நிறுவனம் இப்போது முன்னெடுத்து வருகின்றது.

அண்மையில் ஜப்பானின் Belluna நிறுவனத்தின் தலைமைத்துவ குழுவினர் மேற்கொண்ட விஜயமானது, இரண்டு குழுக்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான கூட்டாண்மையின் ஆவலை பிரதிபலிக்கிறது.

இந்த விஜயத்தில் பல்வேறு துறையிலுமுள்ள Belluna Lanka குழுவினருடன் சந்திப்புகள் நடைபெற்றது.

இக்கலந்துரையாடல்கள் கடந்து வந்த பயணத்தை மட்டுமல்லாமல் இப்புதிய ஆரம்பத்தை அர்த்தமுள்ளதாக முன்னெடுக்கும் வகையில் அமைந்திருந்தன.

# PEPSI இன் சமூகத் திட்டம்



இலங்கையில் பெப்ஸி (Pepsi) மென்பானத்தை போத்தலில் அடை- க்கும் உத்தியோகபூர்வ ஒப்பந்ததாரரா- கவும், முன்னணி மென்பான உற்பத்தியா- ளராகவும் விளங்கும் Varun Beverages Lanka (Pvt) Ltd. நிறுவனம், சமூகத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன், நிறுவனம் பலதரப்பட்ட திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அந்த முயற்சியின் ஒரு பகுதியாக, அண்மையில் PET பிளாஸ்டிக் போத்தல் சேகரிப்பு மற்றும் பொறுப்பான மீள்சுழற்சி மற்றும் கழிவுகள் முகாமைத்துவம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் முக்கியமான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

E இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், PET பிளாஸ்டிக் மூலமான சூழல் பாதிப்பை குறைப்பது மாத்திரமல்லாது, இளம் தலைமுறையினரிடையே நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அது தொடர்பான சிறந்த பழக்கங்களை உருவாக்குவதும் ஆகும்.

Varun Beverages Lanka நிறுவனத்தின் சட்டம், இணக்கம் மற்றும் நிலைபேறான தன்மை தொடர்பான தலைவர் திருமதி எரேஷா கும்புருலந்த இது பற்றித் தெரிவிக்கையில், “Varun Beverages Lanka நிறுவனமாகிய நாம், சூழல் மற்றும் சமூக நலனை வலியுறுத்துவதுடன் ESG கொள்கைகளை பின்பற்றி பல தாக்கமுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

அதன் ஒரு முக்கியமான படியாக, கொடிப்பிலிகந்த வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள் மற்றும் கற்றல் உபகரணங்ளை வழங்கி வைத்தோம்.

அது தவிர, அங்கு ஒரு அரச மரத்தை நடுகை செய்து, பௌத்த வழிபாட்டு பகுதிக்கான கட்டடத்திற்கான பணியையும் ஆரம்பித்து வைத்தோம்.

சமூக மேம்பாடு மற்றும் நிலைபேறான தன்மைக்கான எங்கள் உறுதிப்பாட்டை இது நிரூபித்துள்ளது. அத்துடன், மாணவர்களுக்கு சூழல் நட்பான முறையில; PET பிளாஸ்டிக் கழிவுகளை நிர்வகிப்பதை ஊக்குவிக்கும் சூழலை உருவாக்கும் நோக்கில் இது அமைந்தது.” என்றார்.

# 32 வருட நிறைவைக் கொண்டாடும் Siam House

அசல் தாய்லாந்து உணவுகளை வழங்கும் முன்னோடி உணவகமான சியாம் ஹவுஸ் (Siam House), அதன் 32 வருட பூர்த்தியை மிகவும் பெருமையுடன் கொண்டாடுகிறது.

இந்த மூன்று தசாப்த கால பயணமானது, தாய்லாந்தின் சுவைகளை உள்ளூர் வாடிக்கையாளர்களிடமும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமும் கொண்டு சேர்ப்பதில் சியாம் ஹவுஸ் காண்பித்த அர்ப்பணிப்பு மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் தனித்துவமான தரத்தின் வெளிப்பாடாகும்.



கொழும்பில் தாய்லாந்து உணவுகளை அறிமுகப்படுத்திய முதன்மையான உணவகங்களில் ஒன்றான சியாம் ஹவுஸ், தாய்லாந்தின் பாரம்பரிய சமையல் முறைகளை கடைப்பிடிக்கும் உணவகமாக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. ஒரு சிறிய ஆரம்பத்திலிருந்து தொடங்கி இன்று மக்கள் நெஞ்சங்களில் இடம்பிடித்த உணவகமாக மாறியுள்ள சியாம் ஹவுஸ், பாரம்பரிய தாய் சமையல் முறைகளை சுவை மாறாமல் அவ்வாறே வழங்கி வருகிறது.

சியாம் ஹவுஸ் தற்போது இல. 16, மெல்பேர்ன் அவனியூ, கொழும்பு 04 (முந்தைய முகவரி: இல. 17), இல. 98, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 07 ஆகிய இரண்டு இடங்களில் இயங்கி வருகின்றது.

முன்பதிவுகளை மேற்கொள்ள, கொழும்பு 04 – 0112595944 / 0112595966, கொழும்பு 07 – 0112664955 / 0112664959 ஆகிய தொலைபேசி எண்களை அழைக்கவும்.

# டிஜிட்டல் மாற்றத்திற்கு உதவும் HNB

இலங்கையின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான HNB, நாடு முழுவதும் உள்ள பல சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு (SMEs) சிறிய POS (Point-of-Sale) சாதனங்களை வழங்கி அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

இந்த முயற்சி, சிறு வணிகங்களின் வளர்ச்சிக்கும் டிஜிட்டல் மாற்றத்திற்கான அணுகலுக்கும் உதவுவதன் மூலம் HNB இன் உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.




இந்த POS இயந்திரங்கள் சிறிய மற்றும் குறைந்த செலவில் செயல்படும் சாதனங்களாகும், இவை குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்காக (SMEs) வடிவமைக்கப்பட்டுள்ளன.

இவை வணிகங்களுக்கு கார்ட் மூலம் கொடுக்கல் வாங்கல்களை செயல்படுத்த உதவுகின்றன.

மேலும், இந்த POS சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம், வணிக உரிமையாளர்கள் வாடிக்கையாளர்களுக் கான கொடுப்பனவு செயல்முறையை எளிதாக்கலாம், தினசரி செயல்பாடுகளை மேலும் முறைப்படுத்தி நிர்வகிக்கலாம் மற்றும் இன்று விரைவாக மாறும் சந்தையில் மற்ற வணிகங்களுடன் போட்டியிடுவதற்கு முடியும்.

# கிராமப்புற பாடசாலைகளுக்கு மின்சார சைக்கிள்கள்

இலங்கையின் முன்னணி மொபைல் சேவை வழங்குநர்களில் ஒன்றான ஹட்ச் நிறுவனம் கல்வி அமைச்சுடன் இணைந்து, பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்காக, மின்சார சைக்கிள்கள் 100ஐ உத்தியோக பூர்வமாகக் கையளித்தது இந்த நிகழ்வு, 2025 ஏப்ரல் 25ம் திகதி அமைச்சின் வளாகத்தில் நடைபெற்றது.

கிராமப்புறங்களில் போக்குவரத்து சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட, குறிப்பாக அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்ட இந்த முயற்சி, கல்விக்கான வசதியை எளிதாக்கும் அமைச்சின் தூரநோக்கு இலக்குடன் ஒன்றியுள்ளது.

இலங்கை முழுவதும் கல்விக்கான வசதியை வலுப்படுத்துவதற்கும், சமூக அபிவிருத்தியை மேம்படுத்து வதற்கும் ஹட்ச் நிறுவனத்தின் நீடித்த அர்ப்பணிப்புக்கு இந்த செயற்திட்டம் சிறந்ததொரு சான்றாக அமைந்துள்ளது.

இந்த வைபவத்தில் பிரதி கல்வி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன அவர்கள் கலந்து சிறப்பித்துள்ளதுடன், ஹட்ச் நிறுவனத்தின் பதில் பிரதம நிதி அதிகாரி திரு. ஷகில விஜேசிங்க மற்றும் அமைச்சு மற்றும் ஹட்ச் நிறுவனத்தின் முக்கிய பிரமுகர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.





# மன்னாரில் காற்றாலை திட்டம்

இலங்கையின் மிகப்பெரிய தனியார் முதலீட்டு காற்றாலை திட்டமான 50ஆறு திறன் கொண்ட காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் ஒன்றை உயலடநலா Fentons நிறுவனத்தின் காற்றாலை பிரிவான உயலறுனை மூலம் மன்னார் பகுதியில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கான போட்டிமிக்க விலைமனுக் கோரலில் வெற்றி பெற்றதையடுத்து, இலங்கை மின்சார சபை (CEB) உத்தியோகபூர்வ மின்சார கொள்முதல் உடன்படிக்கை (PPA) கைச்சாத்திடும் நிகழ்வு, 2025 மே 28 ஆம் திகதி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் இடம்பெற்றது.

விலைமனுக் கோரல் நடவடிக்கையைத் தொடர்ந்து, உயலறுனை One Limited நிறுவனத்திற்கு மன்னார் பகுதியில் 50ஆறு காற்றாலை அபிவிருத்தித் திட்டத்தை வழங்குவதை இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்துகிறது. 1மறுா அலகு மின் உற்பத்திக்கு 4.65 சதம் அமெரிக்க டொலர் எனும் மிகக் குறைந்த விலையில் இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி பயணத்தில் முக்கியமான முன்னேற்றமாக இது கருதப்படுவதோடு, நாட்டிற்கு நீண்டகால சூழல் மற்றும் பொருளாதார நன்மைகளை கொண்டுவரும்.

## வளர்ச்சிப் பாதையில் Mahindra Ideal





இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் நிதி நிறுவனங்களில் ஒன்றான Mahindra Ideal Finance Limited (MIFL), 31 மார்ச் 2025ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வலுவான வருவாய் மற்றும் இலாப செயல்திறனை பதிவு செய்துள்ளது. அதன் கடன் வழங்கும் பிரிவுகளில் வலுவான தேவை மற்றும் கடுமையான செலவு நிர்வகிப்பு முயற்சிகளால் ஆதரிக்கப்பட்டு, இந்நிறுவனம் 2025 நிதியாண்டில் 146 மில்லியன் ரூபா நிகர இலாபத்தை (PAT) பதிவு செய்துள்ளது.

இது 2024 நிதியாண்டை விட 41% அதிகரிப்பாகும். மொத்த வருவாய் 19% உயர்ந்து 2.74 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது, அதில் நிகர வட்டி வருவாய் 22% அதிகரித்து 1.34 பில்லியன் ரூபாவாகவும், பிற இயக்க வருவாய் 91% உயர்ந்து 296 மில்லியன் ரூபாவாகவும் உள்ளது.

ஒதுக்கீட்டு முந்தைய செயற்பாட்டு இலாபம் (PPOP) 79% அதிகரித்து 507 மில்லியன் ரூபாவாக உயர்ந்தது, அதேநேரம் நிறுவனத்தின் கிளை வலையமைப்பு மற்றும் குழு வலிமையில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைத் தொடர்ந்து மொத்த செயற்பாட்டுச் செலவுகள் 17% மாத்திரம் அதிகரித்தன.

கடன் மற்றும் வசூல் செயல் முறைகளில் தொடர்ந்த துல்லியமான கவனத்தின் விளைவாக, 31 மார்ச் 2025 நிலவரப்படி நிறுவனத்தின் மொத்த நிலை 3 கடன் விகிதம் மிகவும் ஆரோக்கியமான 1.86% ஆக பதிவாகியுள்ளது, இது நிறுவனத்தின் கடன் துறையின் தரத்தை எடுத்துக்காட்டுகிறது.

## 19-IWS Logistics இற்கு DIMO வழங்கிய KALMAR DCU80





இலங்கையில் KALMAR உபகரணங்களுக்கான உத்தியோகபூர்வ பிரதிநிதியாக செயற்பட்டு வரும் DIMO நிறுவனம், நாட்டின் முன்னணி தனியார் கொள்கலன் சேமிப்பு நடவடிக்கை நிறுவனமான IWS Logistics (Private) Limited நிறுவனத்திற்கு புதிய அதிநவீன KALMAR DCU80 Empty Container Handler (ECH) வாகனத்தை அண்மையில் வழங்கியுள்ளது.

KALMAR DCU80 என்பது 8 தொன் எடையை தூக்கும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது வெற்று கொள்கலன்களை திறமையாக கையாள்வதற்காக வடிவமைக்கப்பட்டிருப்பதோடு, செயற்பாட்டுத் திறனை அதிகரிக்க உதவுகிறது. அத்துடன், இது சிறப்பான இட முகாமைத்துவத்திற்கு உதவுவதுடன், உச்சபட்ச களஞ்சியத் திறனை பேணுவதற்கு உதவுகிறது.

இது General Purpose (GP) கொள்கலன்கள் 6 இன் உயரம் வரை எளிதாக கையாளக்கூடியது.

வழக்கமான வெற்று கொள்கலன் கையாளும் வாகனங்களுடன் (empty container handler) ஒப்பிடும்போது, KALMAR DCU80 இல் உள்ள Smart Hydraulics மற்றும் Load Sensing Technology ஆகியன, தேவையான நேரத்தில் மட்டுமே ஹைட்ரோலிக் சக்தியை வழங்குவதன் மூலம் எரிபொருள் செலவையும் பராமரிப்புச் செலவையும் குறைக்கின்றன.

இதன் மூலம் களஞ்சியத்தின் காபன் வெளியீட்டை கணிசமாக குறைப்பதற்கு இது உதவுகிறது. எனவே பொருளாதார ரீதியாகவும், சுற்றுச்சூழல் ரீதியாகவும் இது சிறந்த தெரிவாக அமைகிறது.

24/7 செயற்பாட்டுத் திறனைக் கொண்ட இது, சிரமமான மற்றும் சவாலான காலநிலை சூழல்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய, நம்பிக்கையுடன் பயன்படுத்தக் கூடியதாகும். அத்துடன் இயக்குபவரை மையமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளதால், சிறந்த செயற்பாட்டுத் திறன் மற்றும் சிறந்த பயன்படுத்தும் அனுபவத்தை வழங்குகிறது.

## Pan Asia - IBM இணைவு



இலங்கை முழுவதும் விரைவான, இன்னும் பாதுகாப்பான வங்கிச் சேவைகளை வழங்கும் வகையில் வங்கியின் டிஜிட்டல் உட் கட்டமைப்பை நவீன மயப்படுத்துவதற்காக பான் ஏசியா வங்கியுடன் கை கோர்த்துள்ளமை குறித்து IBM (NYSE: IBM) அறிவித்துள்ளது.

நிகழ்நேரத்தில் தனிப்பயனாக்கம் செய்யப்பட்ட தீர்வு அனுபவங்கள், வெளிப்படைத்தன்மை, மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை நாடுகின்ற புதிய மற்றும் தற்போதைய வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, இலங்கையில் வங்கிகள் அனைத்தும் பாரிய மாற்றங்களுக்கு தம்மை உட்படுத்தி வருகின்றன.

எதிர்கால வளர்ச்சி மற்றும் 24/7 வங்கித் தொழிற்பாடுகளுக்கு உதவியாக, நவீன சேர்வர்கள் (server), பயன்பாடு (application) கண்காணிப்பு மற்றும் தரவு தேக்ககத்தை நீட்டித்துக் கொள்ளல் போன்றவற்றுக்கு செயற்கை நுண்ணறிவு வலுவூட்டலுடனான அவதானிப்பு ஆகியவற்றுடன் தனது தொழில்நுட்ப உட்கட்டமைப்பை பான் ஏசியா வங்கி மேம்படுத்தியுள்ளது.

தனது கிளவுட் (cloud) தொழில்நுட்ப தயார்நிலையை மேம்படுத்தி, செயலிழப்பு (downtime) நேரத்தைக் குறைத்து, வாடிக்கையாளர்களுக்கான அனுபவத்தை மேம்படுத்துவதற்கு, பயன்பாடு செயற்றிறனை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதற்கு இது வங்கிக்கு உதவியுள்ளது.

தனது வணிகக் கூட்டாளரான South Asian Technologies (SAT) உடன் ஒன்றிணைந்து பணியாற்றியுள்ள IBM, பயன்பாட்டுச் செயற்றிறன் கண்காணிப்பை நிகழ் நேரத்தில், முழு அடுக்கில் அவதானிப்பதற்காக IBM Power10 servers, IBM FlashSystem storage மற்றும் IBM Instana உள்ளிட்ட நவீன செயற்கை நுண்ணறிவு மற்றும் கலப்பு கிளவுட் தீர்வுகளை செயற்படுத்தியுள்ளது.




# Ritzbury Relay கார்னிவல் 2025 வெற்றிகரமாக நிறைவு

Ritzbury Relay கார்னிவல் 2025 ஏப்ரல் 11 ஆம் திகதி தியகம, மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் வெற்றிகரமாக பூர்த்தியடைந்திருந்தது.
மூன்று நாட்கள் கடுமையான போட்டி மற்றும் சாதனைமிகு செயற்திறன்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தி முடிவடைந்திருந்தது. நாடு முழுவதையும் சேர்ந்த 250 க்கும் அதிகமான பாடசாலைகளின் 5000 க்கும் அதிகமான இளம் மெய்வல்லுனர் வீரர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றதுடன், அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களின் திறமைகள், திறன்கள், ஆற்றல் மற்றும் விளையாட்டு பண்புகளை வெளிப்படுத்த உதவும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது. கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் சம்மேளனம் (SLSAA) ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தத இந்த நிகழ்வுக்கு ரிட்ஸ்பரி ஏக அனுசரணை வழங்கியிருந்தது.
ஆண்கள் பிரிவில் கொழும்பு, புனித பத்திரிசியார் கல்லூரி அணி 155 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தையும், நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி இரண்டாமிடத்தையும், வென்னப்புவ சென். ஜோசப் வாஸ் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.
பெண்கள் பிரிவில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை 130 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்தை வென்றதுடன், வலல ஏ. ரத்நாயக்க மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும், பன்னிபிட்டிய தர்மபால வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன

# Prime Group இன் தூதுவராக உமாரியா




இலங்கையின் நம்பிக்கையை வென்ற ரியல் எஸ்டேட் வர்த்தக நாமமும், அவுஸ்திரேலியா மற்றும் துபாயில் கிளைகளை நிறுவியதனூடாக சர்வதேச ரீதியில் வியாபித்துள்ள இலங்கையின் முதலாவது ரியல் எஸ்டேட் நிறுவனமுமான Prime Group, தனது சர்வதேச வர்த்தக நாமத் தூதுவராக இலங்கையின் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற இசைக் கலைஞரான உமாரியா சிங்ஹவன்ஸவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.
இந்த கைகோர்ப்பினூடாக, 100% இலங்கையின் புகழ்பெற்ற இரு நாமங்களான Prime Group மற்றும் உமாரியாவை ஒன்றிணைத்து, சர்வதேச ரீதியில் இலங்கையின் திறமையையும், சிறப்பையும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.
உள்நாட்டில் உமாரியா பலராலும் விரும்பப்படும் இசைக் கலைஞராக அமைந்திருப்பதுடன், சர்வதேச ரீதியில் கொண்டாடப்படும் இசை நட்சத்திரமாகவும் திகழ்கிறார். இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த கைகோர்ப்பு, புரிந்துணர்வு உடன்படிக்கை (MoU) கைச்சாத்திடலினூடாக உத்தியோகபூர்வமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிராந்திய மற்றும் சர்வதேச சந்தைகளில் Prime Group இன் பிரசன்னத்தை விஸ்தரிக்கும் வகையில் இந்த பங்காண்மை அமைந்திருப்பதுடன், அதற்காக உமாரியாவின் சர்வதேச ஆதிக்கத்தையும் பின்பற்றும். இந்த கைகோர்ப்பினூடாக, இலங்கையின் திறமை மற்றும் கலாசாரம் ஆகியவற்றை கொண்டாடும் வகையில் அமைந்திருப்பதுடன், உள்நாட்டு சிறப்புக்கு வலுவூட்டும் Prime Group இன் கொள்கையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

# SAMSUNG Vision AI தொழில்நுட்பம் அறிமுகம்




இலங்கையின் முன்னணி மின்னணு சாதன நிறுவனமான Samsung, 2025ஆம் ஆண்டிற்கான அதிநவீன Neo QLED 8K, OLED, QLED மற்றும் The Frame தொலைக்காட்சி களை அறிமுகப்படுத்தியுள்ளது.
இப்புதிய மாதிரிகளில் புரட்சிகரமான 'Vision AI ' தொழில்நுட்பம் இணைக்கப்பட்டுள்ளது. இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இலங்கை வாடிக்கையாளருக்கு தனித்துவமான பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்குவதோடு, இப்புதிய தொலைக் காட்சிகள் வெறும் திரைகளாக மட்டுமல்லாமல், அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் அறிவார்ந்த சாதனங்களாக செயல்படுகின்றன.
Samsung Vision AI என்பது அதிநவீன செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பக் கட்டமைப்பாகும். இது மேம்படுத்தப்பட்ட ஒளி மற்றும் ஒலி அம்சங்களை இணைத்து, பாவனையாளர்களுக்கு தனிப் பயனாக்கப்பட்ட அனுபவத்துடன் உச்ச செயல்திறனை வழங்குகிறது. இந்த புதுமையான தொழில்நுட்பம் மூன்று அடிப்படை தூண்களில் உருவாக்கப் பட்டுள்ளது.
AI Mode என்பது மேம்பட்ட ஆழ்கற்றல் நுட்பங்கள் மூலம் உள்ளடக்கம் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப காட்சி மற்றும் ஒலியை உடனுக்குடன் சீரமைக்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு முறையும் கண்கவர் காட்சிகளையும் சூழ்நிலை ஒலி அனுபவத்தையும் உறுதிசெய்கிறது.

# செலான் வங்கி சாதனை





செலான் வங்கி, 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக (PBT) ஷரூ.4,199 மில்லியனை பதிவு செய்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் ஷரூ.3,704 மில்லியனாக இருந்து 13.36% வளர்ச்சியைக் காட்டுகிறது.
மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த 3 மாதங்களுக்கு, செலான் வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ. 2,761 மில்லியனாக பதிவாகியுள்ளதுடன் 2024ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ. 2,295 மில்லியனுடன் ஒப்பிடும்போது இது 20.29% வளர்ச்சி ஆகும்.
சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் கடன்கள் மற்றும் வைப்புத்தொகைகளை மீள் மதிப்பீடு செய்ததன் காரணமாக, மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த 3 மாதங்களில் நிகர வட்டி வருமானம் ஷரூ. 9,371 மில்லியனில் இருந்து ஷரூ. 8,587 மில்லியனாகக் குறைந்துள்ளது.
இது முந்தைய ஆண்டை விட 8.37% குறைவு. வங்கியின் நிகர வட்டி மிகை (NIM) 2024இன் 4.90% இலிருந்து 2025இன் முதல் காலாண்டில் 4.45% ஆகக் குறைந்துள்ளது.
2025ஆம் ஆண்டின் முதல் க ாலாண்டில் வங்கியின் நிகர கட்டண அடிப்படையிலான வருமானம் ரூ.1,837 மில்லியனில் இருந்து ரூ. 2,091 மில்லியனாக 13.83% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மேலும் 2025ஆம் ஆண்டில் இவ்வளர்ச்சிக்கு முக்கியமாக கடன்கள், அட்டைகள், பணம் அனுப்புதல், வர்த்தகம் மற்றும் பிற நிதிச் சேவைகளிலிருந்து பெறப்பட்ட கட்டண வருமானம் காரணமாகும்.

# Clogard அறிமுகம்




இலங்கையின் நம்பிக்கைக்குரிய வாய்ச் சுகாதார வர்த்தகநாமமாக விளங்கும் உநmas Consumer Brands நிறுவனத்திற்குச் சொந்தமான க்ளோகார்ட் (Clogard), வலுவான பற்கள் மற்றும் ஆரோக்கியமான ஈறுகளை பெறுவதனை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தனது பிரபலமான Clogard Natural Salt Toothpaste தயாரிப்பை புதுப்பித்து மீள அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது.
புதிய வடிவமைப்பாக வெளியான இந்தப் பற்பசை, வலுவான பற்கள் மற்றும் ஆரோக்கியமான ஈறுகளை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.
தேசிய வாய்ச் சுகாதார ஆய்வின்படி, 5 சிறுவர்களில் ஒருவர் ஈறு தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதாகவும், நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 50% ஆனோர் ஈறு பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
புதுப்பிக்கப்பட்ட Clogard Natural Salt ஆனது, பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட அறிவையும், நவீன வாய்ச் சுகாதார தொழில்நுட்பத்தையும் இணைத்த வடிவமாக, பாதுகாப்பான, கட்டுப்படியான விலையில் மக்களுக்கு இலகுவாக அணுகக்கூடிய பற்பசையாக வெளிவந்துள்ளது.